**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIF Impact Factor 3.5| Multidisciplinary
DOI: https://doi.org/10.63300/kijts05sp062026.04
https://ngmtamil.in/

# Social Consciousness in Kannadasan's Film Songs

**Mrs N. Vijayalakshmi[1*], Dr S. Maheswari, M.A., M.Phil., Ph.D., NET,[2],**
[1]Full-time Ph.D. Research Scholar, Department of Tamil, Meenakshi College of Arts and Science, Meenakshi Academy of Higher Education and Research (Deemed to be University),
K.K. Nagar, Chennai-78.
ORCiD: https://orcid.org/0009-0002-9880-1350.
[2]Assistant professor, Department of tamil, Faculty of Humanities and Science, Meenakshi College of Arts and Science, Meenakshi Academy of Higher Education and Research (Deemed to be University),
K.K. Nagar, Chennai-78.
ORCiD: https://orcid.org/0009-0005-2165-2280, EMail: maheshwari_s@maherfhs.ac.in.
[*]Corresponding Author Email: vijaya_res@maher.ac.in, Tel: 9500613611.

**Article Info**
Received on 27-June-2026, Revised on 29-June-2026, Accepted on 29-June-2026, Published on 01-July-2026

**Abstract:**
Society represents a collective way of life. It emerged when humans transitioned from an animalistic state to one of mutual interaction and relationships. People come together and function based on shared foundations such as religion, culture, politics, science, and patriotism. A community of people living together is referred to as a society. If a writer drifts away from social reality, he becomes isolated. Works created in harmony with society are cherished by people long after their time. 'Kaviarasar' has woven his personal experiences into his poems and songs, presenting them in a manner that resonates with society. The poet has been deeply influenced by experiences in both his personal and public life. Consequently, he has crafted his poetry with a focus on society, while maintaining literary excellence. Family relationships form the foundation of people's way of life; indeed, it is these family bonds that blossom into society itself. Literature portrays the social interactions and lifestyles of people living together in society, the highs and lows they experience, their likes and dislikes, their culture, and the inner anguish of the working class. This article examines the social norms and moral principles found in the songs of the poet Kannadasan.

***KEYWORDS:*** *Family, life, marriage, wife, head of the family, female head of the family, lullaby, brother-sister relationship, brother-brother relationship, social structure, education in society.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

# கண்ணதாசன் திரையிசைப்பாடல்களில் சமுதாயச்சிந்தனை

[1]**திருமதி ந.விஜயலட்சுமி,** முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்) தமிழ்த்துறை, மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், கே.கே.நகர், சென்னை-78.

[2]**முனைவர் செ.மகேஸ்வரி,** M.A., M.Phil., Ph.D., Net. நெறியாளர், உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, மீனாட்சி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,கே.கே.நகர், சென்னை-78.

**ஆய்வுச்சுருக்கம்**

சமுதாயம் என்பது கூட்டு வாழ்க்கையாகும். மனிதன் விலங்கின நிலையிலிருந்து மாறி ஒருவரோடொருவர் உறவு கொள்ளும் நிலையில் சமுதாயம் தோன்றியது. சமயம், பண்பாடு, அரசியல், அறிவியல், நாட்டுப்பற்று முதலியவற்றின் அடிப்படையில் சேர்ந்து செயல்படுகின்றன. ஓர் எழுத்தாளன் சமுதாயத்திலிருந்து விலகினால் அவன் தனிமைப்படுத்தப்படுவான். சமுதாயத்தோடு ஒன்றிய நிலையில் படைக்கப்படும் படைப்புகள் காலங்கடந்தும் மக்களால் போற்றப்படுகின்றனர். கவியரசரின் தனிப்பட்ட அனுபவங்களை தனது கவிதைகளிலும், பாடல்களிலும் சமுதாயத்திற்கு தகுந்தார் போல் படைத்துள்ளனர். கவிஞருக்குத் தனி வாழ்விலும், பொது வாழ்விலும் நிறைய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அதனால் அவரது கவிதைகள் இலக்கியச் சுவையோடு சமுதாயத்தைக் கருத்திற்கொண்டே இயற்றியுள்ளார். மக்களின் வாழ்க்கை முறையில் அடிப்படையாக அமைவது குடும்ப உறவுகளாகும். குடும்ப உறவுகளே சமுதாயமாக மலர்கிறது. இச்சமுதாயத்தில் இணைந்து வாழும் மனிதர்களின் சமூகத் தொடர்புகள், வாழ்க்கைமுறை, அதில் அவன் பெற்றுள்ள உயர்வு, தாழ்வுகள் அவர்தம் விருப்பு வெறுப்புகள் அவர்களது பண்பாடு, உழைக்கும் மக்களின் மனக்குமுறல்கள் போன்றவற்றை இலக்கியங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அவற்றுள் கவிஞர் கண்ணதாசனின் பாடல்களில் காணப்படும் சமுதாய நெறிமுறைகளையும் ஒழுக்கக் கோட்பாடுகளையும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**திறவுச்சொற்கள்:** குடும்பம், வாழ்க்கை, திருமணம், மனைவி, குடும்பத்தலைவன், குடும்பத்தலைவி, தாலாட்டு, அண்ணன் தங்கை உறவுநிலை, அண்ணன் தம்பி உறவுநிலை, சமூக அமைப்பு, சமுதாயத்தில் கல்வி.

**முன்னுரை**

கண்ணதாசனின் உள்ளத்தில் சமுதாய நல எண்ணங்கள் அமைந்திருந்தன. எனவே, தமது திரையிசைப் பாடல்களில் சமுதாயத்தில் நடக்கக் கூடிய நிகழ்வுகளை மக்களுக்குக் கொண்டு சேர்த்தார். அதுபோலவே, இவர் தம் சமுதாய நல உணர்விற்கான தூண்டுதல்களுள் திரைப்படத்துறையும் ஒன்றாக விளங்கியது. தமிழ் இலக்கியங்களும் இவர் தம் சமுதாய நல

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/kijts05sp052026 

உணர்விற்குத் துணையாக இருந்தது. தனிமனிதனுடைய வாழ்க்கையையும், சமுதாயச் சிக்கல்களையும் ஆராய்வதே இவ்வாய்வு எடுத்து இயம்புகிறது.

**குடும்பம்**

ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க ஆரம்பப் புள்ளியாக அமைவது குடும்பம் எனலாம். அதுபோல, உயிரினங்களின் அடிப்படை அலகு 'செல்' என்பார் அறிவியல் அறிஞர்கள். மேலும், குடும்பம் என்ற அமைப்பு சமுதாயத்தின் பல்வேறு இயக்கங்களுக்கு அடிப்படையாக அமைகின்றது. திருமணத்தில் ஆரம்பித்து இல்லறமாக சிறக்கும் குடும்பமானது எவ்வாறு உருவாகிறது என்பதை தொல்காப்பியரும்,

**"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப" தொல்.பொருள் பா.எ 145**

என்ற அடிகளில், தமிழன் பல்வேறு தடுமாற்றங்களைக் கடந்த பின்பு தான் இல்லறத்திற்குள் நுழைகிறான். பல்வேறு இடையூறுகளையும் துன்பங்களையும் தாண்டி இல்லறத்திற்குள் சென்று வாழத் தொடங்கும் மனிதன் குடும்பத்தை ஒரு கலையாகவே காணவேண்டும் என்பதை,

**"குடும்பக்கலை போதுமென்று**
**கூறடா கண்ணா – அதில்" (காத்திருந்த கண்கள்) தொகு -2**

எனும் பாடலில், 'காத்திருந்த கண்கள்' என்ற திரைப்படத்தில் பாடியுள்ளார் கவிஞர். குடும்பம் கலையாக வேண்டுமெனில் அதில் அனைவரும் அன்பின் பிணைப்பில் இருக்கவேண்டும் என்கிறார். குடும்பத்தில் உள்ளவர்களே ஒருவருக்கொருவர் ஒற்றுமையின்றி செயல்பட்டால் சமூகத்தின் கட்டமைப்பானது சிதறிய நிலையில் காணப்படும் எங்கிறார் கவிஞர்.

**வாழ்க்கை**

ஒரு தனி மனிதனுக்குத் தேவையானது சமுதாயமாகும். அச்சமுதாயத்தின் வாழ்வாதாரமும், தனிக் குடும்பத்தின் வாழ்வாதாரமும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. அதே போல, சமுதாய விலங்காகிய மனிதன் பிற மனிதர்களோடு கலந்து வாழும் போது தன்னுலகத்தை ஓரளவு புறக்கணித்துப் பொது நல வாழ்க்கையைப் பேண வேண்டியவனாகிறான். எனவே மனிதன் கவலையற்று வாழ வேண்டுமானால் மனைவி மாண்புடையவளாகவும், மக்கள் அறிவு நிரம்பியவர்களாகவும், இருப்பதற்கு அரசு ஒரு காரணமாகவும் அமைந்திருப்பதையும் சுட்டிக்காட்டும் புறநானூற்றுப்பாடலில்,

**"மாண்ட என் மனைவியொடு, மக்களும் நிரம்பினர்;**
**யான் கண்டனையர் என் இளையரும்; வேந்தனும்**
**அல்லவை செய்யான், காக்கும்; அதன்தலை" (புறம்:191)**

எனும் பிசிராந்தையார் கூற்றுப்படி, வாழ்க்கையானது சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் வாழ்ந்தால் தான், மனிதன் மூப்பில்லாத வாழ்வினை நல்வாழ்வுடன் வாழ முடியும் என்பதை நம்மால் அறிய முடிகிறது.

வாழ்க்கையில் எப்போதும் மகிழ்ச்சியோடும் மன அமைதியோடும் இருக்க ஓரிடத்தை நோக்கி ஒருவன் பயணிக்க முடியாது. ஏனெனில் அப்படி ஓரிடமே இல்லை. இவை இரண்டும் நம் வாழ்வின் ஒவ்வொரு நாளிலும் கலந்திருப்பவை. இதை உணராமல் வாழ்பவனின் வாழ்க்கை ஏமாற்றத்தில்தான் முடியும் என்பதை கண்ணதாசன்,

**“எங்கே வாழ்க்கை தொடங்கும்**
**அது எங்கே எவ்விதம் முடியும்**
**இதுதான் பாதை இதுதான் பயணம்**
**என்பது யாருக்கும் தெரியாது**
**பாதையெல்லாம் மாறிவரும்**
**பயணம் முடிந்துவிடும் (நெஞ்சில் ஓர் ஆலயம்) தொகு.2**

‘நெஞ்சில் ஓர் ஆலயம்’ திரைப்படத்தில் திரையிசைப் பாடலில், நம் வாழ்க்கை எங்கே தொடங்கும் என்பதையும் நாம் அறிந்திருக்கவில்லை. அது எங்கே எவ்விதம் முடியப்போகிறது என்பதையும் நாம் அறிய இயலாது. வாழ்க்கைப் பயணத்தை நாம் திட்டமிடலாம். அதற்கான முழு முயற்சிகளில் ஈடுபடலாம். ஆனால், ‘இதுதான் என் பாதை’ என்று தீர்மானமாக இருக்க நம்மால் முடிவதில்லை என்பதை கண்ணதாசன் குறிப்பிடுகிறார். எனவே, வாழ்க்கை நம்மை எங்கெங்கோ இழுத்துக்கொண்டு செல்கிறது. நாம் விரும்பிய பாதை இல்லாமல், மாறி வந்திருக்கிறோம் என்பதே, நமக்கே தெரிகிறது. அதைத் தெரிந்து தெளியும் நேரத்தில், பயணத்தின் நிறைவை நெருங்கியிருப்போம். சமுதாயத்தில் பொதுவாக மனிதர்களுடைய வாழ்க்கைப் பாதை தொடக்கம் என்பது முடிவு தெரியாத சிக்கல் போன்றதாகும். மனிதனுடைய வாழ்க்கை என்பது கடல் அலையைப் போல நிலையற்றது. மனிதர்களாகிய நாம் அதன்மேல் பயணம் செய்யும் படகுப் போன்றவர்கள் என்பதை,

**“ஆசையே அலைபோலே**
**நாமெல்லாம் அதன்மேலே**
**ஓடம் போலே ஆடிடுவோமே**
**வாழ்நாளிலே”**
**(தை பிறந்தால் வழி பிறக்கும்) தொகு.2**

எனும் வரியில் ‘தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்ற திரைப்படப்பாடலில் சமுதாயத்தில் மனிதனுடைய வாழ்க்கையைப் பற்றியும், நிலையாமைப் பற்றியும் கூறியிருப்பதை நம்மால் அறியமுடிகிறது.

**திருமணம்**

இன்றைய சமுதாயத்தில் இல்லறத்திற்காக ஏற்படுத்தப்பட்ட சமுதாய ஏற்பாடு திருமணமாகும். இன்றைய சமுதாயத்தில் திருமணமாகாமல் தவிக்கும் பெண்கள் பலர் இருக்கின்றனர். அதற்க்கு காரணம் பொருளாதார ஏற்றத்தாழ்வு, சாதி,மதம், சீர்வரிசை போன்ற கொடுமைகளே திருமணம் தடைப்பட காரணமாக அவல நிலையை பற்றி கவிஞர் கூறுகையில்,

**நாளை வரும் உலகினிலே**
**நான்கு வகைப்பருவங்களும்**
**மாறிவரும் கண்மணியே ஆராரோ- இதில்**
**வாழும் வகை காண்பவர்கள் யார் யாரோ? (குழந்தை உள்ளம்) தொகு -1,**

என்று பெண்களுக்கு ஏற்படக்கூடிய வரதட்சணை கொடுமையை பற்றி 'குழந்தை உள்ளம்' என்ற திரைப்படத்தில் கவிஞர் கண்ணதாசன் சமுதாயத்தில் ஏற்படக்கூடிய நிகழ்வுகளை எடுத்துக் கூறியிருப்பதை நம்மால் அறிய முடிகிறது.

**மனைவி**

வாழ்க்கைத் துணையாகிய மனைவியை 'மனையுறை மகளிர்' என்று குறுந்தொகை கூறுகிறது. அதனினும் மேலாக 'வாழ்க்கைத் துணை' என்று வள்ளுவம் போற்றுகிறது. ஒருவனுக்கு மாண்புடைய மனைவி அமைந்துவிட்டால், அவனுக்கு இல்லாதது இல்லை என்பது வள்ளுவர் கருத்தாகும். மனைவி நன்றாக அமைந்துவிட்டாலே வீடு நன்றாக விருத்தியாகும். ஒரு வீட்டில் பெண் நல்லபடியாக இருந்தாலே அந்த குடும்பம் செழிக்கும் என்பதை,

**"மனைவி அமைவதெல்லாம்**
**இறைவன் கொடுத்த வரம்**
**மனது மயங்கி என்ன**
**உனக்கு வாழ்வு வரும்**
**பொருத்தம் உடலிலும் வேண்டும்**
**புரிந்தவன் துணையாக வேண்டும்" (மன்மத லீலை) தொகு.5**

என்ற 'மன்மத லீலை' திரைப்படத்திற்காக கண்ணதாசன் வரிகளில், கே.ஜே. யேசுதாஸ் பாடிய 'மனைவி அமைவதெல்லாம்' பாடலின் வரிகளில் சமுதாயத்தில் மனைவி தலைவனது உணர்வுகளுக்கு மதிப்பளித்து வாழ்வதோடு தலைவனும் மனைவியின் உணர்வுகள் புரிந்து வாழ்தல் வேண்டும் என்று கூறியுள்ளார். மேலும் அடங்காமல் வாழ்ந்து பேராசையாலும், அறியாமையாலும் தன்னலத்துடன் இருக்கும் பெண் உள்ள குடும்பமானது நல்ல சமூகத்தை உருவாக்காது என்பதை,

**"அடங்கா மனைவி அடிமைப்புருஷன்**
**குடும்பத்துக்காகாது ஐயா" (பாமா விஜயம்) தொகு– 5**

என்று ‘பாமா விஜயம்’ என்ற திரைப்படத்தில் கண்ணதாசன் எது நல்லது கெட்டது என்று உணராமல், சொல்வதைக் கேட்கவும் தயாராக இல்லாத மனைவி அமைந்தால் குடும்பம் அழியும் என்று கண்ணதாசன் கூறியிருப்பதை காணமுடிகிறது.

**குடும்பத்தலைவன்**

சமுதாயத்தில் ஆணும் பெண்ணும் சேர்ந்து குடும்பத்தை பாதுகாக்க உள்ளேயும் வெளியேயும் பல பொறுப்புகள் இருக்கின்றன. குடும்ப பொறுப்பை இணைந்து செயலாற்றும் நிலை பழங்காலம் முதல் இக்காலம் வரை நடைமுறையில் இருந்து வருகின்றன. எத்தகைய எண்ணங்களையும் எதிர்த்து நின்று இவ்வுலகில் உள்ளத்தில் அமைதி நிலவ குடும்பத்துக்காக பாடுபடும் தலைவனுடைய உள்ளத்தை,

**நடக்கும் காலில் துணையிருக்கும்**
**வழிந்திடும் வேர்வைத் துளிகளே - அவன்**
**வழித்துணையாவான் (தியாகம்) தொகு-4**

என்று ‘தியாகம்’ எனும் திரைப்படத்தில் குடும்ப வாழ்வில் ஈடுபட்டுள்ள குடும்ப தலைவனின் மன உறுதியையும் அவனுடைய கடின உழைப்பையும் குறித்து பாடியிருப்பதை நம்மால் உணரமுடிகிறது.

**குடும்பத் தலைவி**

குடும்பத்தில் இருக்கக்கூடிய நிரை குறைகளை கண்டறிந்து அவற்றை விளக்கி பேணி காப்பது ஒரு குடும்ப தலைவினுடைய பண்புகள் என்பதை,

**தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற**
**சொற்க்காத்துச் சோர்விலாள் பெண் குறள்: 56**

என்று வள்ளுவர் குடும்பப்பெண் இப்படிதான் இருக்க வேண்டும் எனக் கூறியுள்ளார். குடும்ப பெண்கள் பிறருக்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும் கெடுதல் விளைவிக்க கூடாது என்பது நம் முன்னோர்கள் பின்பற்றி வந்ததை நாம் அறியலாம். சமுதாயத்தில் கலாச்சாரத்திற்கு ஏற்றார்ப்போல் நாகரிகத்தையும் பண்பாட்டையும் போற்றி குழந்தைகளை வளர்த்தும், பெரியவர்களை மதித்தும் மரியாதை செலுத்தியும் செயல்பட வேண்டும் என்பதை,

**அடுத்த வீடு சென்று அரட்டை**
**அடிக்கக் கூடாது- எவ**
**ரானாலும் வீணாகக் கெடுக்கக்கூடாது**
**குடித்தன ஒழுக்கம் எதுவும்**
**குறையப் படாது- பெருங் ( பணம்) தொகு-2**

பெண் என்பவள் சமுதாயத்தில் எப்படி வாழ வேண்டும் என ‘பணம்’ என்ற திரைப்படத்தில் கவிஞர் கண்ணதாசன் கூறியிருப்பதை நாம் காணலாம்.

**தாலாட்டு**

நாட்டுப்புற இலக்கியங்களில் தாலாட்டு மிகப்பெரும் இலக்கியக் கூறாகவே இன்றைக்கும் இருகின்றது. தாலாட்டுப் பாடல்களை நாட்டுப்புற இலக்கியங்கள் தான் வளர்த்தெடுத்து இன்று அளவும் போற்றிப் பாதுகாத்து வருகின்றது. குழந்தையின் மூன்று நான்கு வயது வரை அதைத் தூங்க வைப்பதற்கு பாடியே தீரவேண்டிய கட்டாயமிருப்பதால் இன்றளவும் தாலாட்டுப் பாடல்கள் சமுதாயத்தில் நிலைத்து நிற்கின்றன. நாக. ஜெகசிற்பியன் என்ற நூலில் தாலாட்டுப் பாடல்களை அழகாக விளக்கி பாடப்பட்டதையும் அதேபோல் அந்நூலில் திருநா.வானமாமலையின் ஆசிரியர் **"தாயின் அன்பையும் சேயைச் சுற்றியெழும் கற்பனையும் பாடலாக வழங்கும் பாட்டுருவம் தாலாட்டாகும்" (ப-6)** என்று அதன் சிறப்பினை உயர்த்திப் பாடுவதை நம்மால் அறியமுடிகிறது.

சமுதாயத்திற்கு ஏற்றார் போல் தாலாட்டுப் பாடல்களை கண்ணதாசன் திரைப்படங்களில் பல சூழல்களில் எழுதியிருப்பது அவருடைய கவித்திறனை எடுத்து காட்டுவதாக அமைந்துள்ளது. குழந்தையைத் தாலாட்டும் போது தெய்வீகத் தன்மையுடையவள், முத்துப் போன்றவள், மலர் போன்றவள், கடவுளின் சொத்து என்றும் வர்ணித்து குழந்தையின் அழகைக் கொஞ்சும்போது,

**"மாவடு கண்ணல்லவோ**
**மைனாவின் மொழியல்லவோ**
**பூவின் முகமல்லவோ**
**பொன் போன்ற உடல ல்லவோ" (நிழல் நிஜமாகிறது) தொகு-3**

'நிழல் நிஜமாகிறது' எனும் திரைப்படத்தில், இடம்பெற்றுள்ளது. இப்பாடல் வரிகள் பெண் குழ்ந்தையின் அழகையும், குணத்தையும் வருணிக்கும் வகையில், 'மாவடு போன்ற கண்கள், மைனா போன்ற மொழி, பூவின் மணம், பொன்னான குணம்' ஆகியவற்றை வருணித்து கூறியிருப்பதை அறியமுடிகிறது.

**அண்ணன் தங்கை உறவுநிலை**

சமுதாயத்தில் அண்ணனும் தங்கையும் அன்பால் இணைந்து பாசத்தை தங்களின் உயிர் மூச்சாய்க் கொண்டு வாழ்கின்றார்கள். வாழ்க்கை வேறானாலும் அன்பும் பாசமும் அவர்களை மனத்தால் ஒன்றாகவே சிந்திக்க, செயலாற்ற வைக்கின்றது. ஒருவருக்காக ஒருவர் உயிர் வாழ்வது போல் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தாங்கள் பெற்ற மழலைச் செல்வங்களுக்கு அவர்கள் தனித்தனியே பாடும் தாலாட்டுப் பாட்டில் அன்பும் பாசமும் உயிரோட்டத்தோடு காணப்படுகிறது.

தங்கை தான் வீட்டில் வளர்ந்த பெருமையையும் தன் அண்ணன் மாண்பையும் சொல்கின்றாள். தன் தங்கையின் அன்பால், தான் அன்பின் கைதியாய் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையை அண்ணன் கூறுகின்றான். இப்படி ஒரு பாசப் போராட்டமான தாலாட்டினை கவியரசர் தன் வைர வரிகளில்,

**"யானைப்படை கொண்டு சேனை பலவென்று**
**ஆளப் பிறந்தாயடா - புவி**
**ஆளப் பிறந்தாயடா**

**அத்தை மகளை மணங்கொண்டு இளமை வழி கண்டு**
**வாழப் பிறந்தாயடா!** **(பாசமலர்) தொ-1**

என்றும்,

**தங்க கடியாரம் வைர மணியாரம்**
**தந்து மணம் பேசுவார் - பொருள்**
**தந்து மணம் பேசுவார் - மாமன்**
**தங்கை மகளான மங்கை உனக்காக**
**உலகை விலை பேசுவார்!** **(பாசமலர்) தொ-1**

என்று ‘பாசமலர்’ திரைப்பட்த்தில் மலர்ந்து மலராத பாடலில் அண்ணன் தன் மகனை வீரமுள்ளவன், இந்த நிலத்தை ஆள்வதற்கென்றே பிறந்தவன் என்கின்றார்.

**அண்ணன் தம்பி உறவுநிலை**

ஒரே குடும்பத்தில் பிறந்து வளர்ந்த அண்ணன் தம்பி என்ற தொப்புழ் கொடி உணர்வுபூர்வமாகவும், சொந்தமாகவும் அமைந்திருப்பது ஆகும். உலகில் கிடைக்கின்ற மற்ற எல்லா சொந்த பந்தங்களை விடவும், நட்புகளை விடவும் எவ்வித பிரதிபலனும் எதிர்பார்க்காமல் இறுதிவரை நம்முடன் தொடர்வது. இவ்வுறவு சிறந்தாக அமைய வேண்டுமென்பதை,

**"முத்துக்கு முத்தாக**
**சொத்துக்குச் சொத்தாக**
**அண்ணன் தம்பி பிறந்து வளர்ந்தோம்**
**கண்ணுக்குக் கண்ணாக**
**அன்பாலே இணைந்து வந்தோம்"** **(அன்புச் சகோதரர்கள்) தொகு-4,**

‘அன்புச் சகோதரர்கள்' என்ற திரைப்படத்தின் பாடலில் ஒரு காலகட்டத்தில் முத்துகளைப் போன்று ஒன்றோடொன்று நெருக்கமாக இணைக்கப்பட்டிருந்த அண்ணன் தம்பி உறவு நிலையைக் கூறப்பட்டுள்ளது. மேலும் சமுதாயத்தில் மனிதனுடைய போலித்தனங்களைப் பட்டியலிட்டுக் காட்டுகிறது.

**சமுதாயத்தில் உறவு நிலை**

ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் உயர்நிலையில் வாழும் போது உறவு வந்து சேர்வதும் தாழும்போது சொல்லாமல் ஓடி மறைந்து விடுவதும் மனிதர்களின் இயல்பு. இந்தக் கருத்தை,

**“வாழும் நாளிலே கூட்டம் கூட்டமாய்**
**வந்து சேர்கிறார் பாரடா - கை**
**வறண்ட வீட்டிலே உடைந்த பானையை**
**மதித்து வந்தவர் யாரடா ..................................**
**பணத்தின் மீதுதான் பக்தி என்றான்**
**பந்தபாசமே ஏனடா”** **(பழநி) தொகு-2**

என்று பழநி திரைப்படப் பாடலின் மூலம் குறிப்பிட்டுள்ளார். நல்ல நிலையில் வாழும்போது வரும் உறவு, நிலைதாழ்ந்தபோது போகும் என்ற கருத்து புலனாகிறது.

**சமூக அமைப்பு**

சமூக அமைப்பின் மூலம் கலாச்சார பண்பாடுகள் அவற்றின் அடையாளங்கள் முறையாக கட்டுப்படுத்தப்பட்டு கடைபிடிக்கப்படுகின்றன. சமூக அமைப்பில் உருவாக்கப்படும் கட்டுப்பாடுகளும், கட்டமைப்பகளும் சமூக மாற்றத்தை உருவாக்க துணைபுரிகின்றன. கவிஞர் கண்ணதாசன் காலநிலைக்கு ஏற்றார்ப் போல் நிகழும் சமூகப் பண்பாட்டு மனநிலையை,

**ஒரு தாய் மக்கள் நாமென்போம்**
**ஒன்றே எங்கள் குலமென்போம்" (ஆனந்தஜோதி) தொகு-1**

என்று 'ஆனந்தஜோதி' என்னும் திரைப்படத்தில் விளக்கி நாம் அனைவரும் ஒரு தாயின் பிள்ளைகள் என்றும், அனைவரும் ஒரே குலம் என்றும் மக்களை ஒன்றிணைத்துப் பாடியிருப்பதைக் காணலாம்.

**சமுதாயத்தில் கல்வி** கல்வியறிவு என்பது ஒவ்வொரு மனிதனக்கும் அவசியமான ஒன்று, ஒரே மனிதகுலத்தில் ஒருவன் ஆண்டவனாவதும், ஒருவன் அடிமையாவதும் கல்வியறிவுயின்மையே ஆகும். ஒருவன் கற்கும் கல்வி எதனையும் ஏன்? எதற்கு என கேள்வி கேட்கும் பகுத்தறிவை உண்டாக்குகின்றது. கல்வி என்பது மனிதனை மிருக நிலையிலிருந்து மனித நிலைக்கும், மனித நிலையிலிருந்து தெய்வ நிலைக்கும் உயர்த்தும் ஒரு ஒப்பற்ற கருவியாகும்.

ஒரு தாய் பெற்ற பல பிள்ளைகளில் கல்வியறிவு உடையவனையே பெரிதும் விரும்புவாள். வீட்டிலும் நாட்டிலும் எங்கு சென்றிடினும் கல்வி நிரம்பப் பெற்றவனாயின் சிறப்பான உயரிய பதவிகளை உலக வாழ்வில் அடைய முடியும். கல்விச்செல்வத்தை நிரம்பப் பெற்றவர்களை சமுதாயம் உயர்ந்த இடத்தில் வைப்பதை,

**மாபெரும் சபையில் நீ நடந்தால் உனக்கு**
**மாலைகள் விழ வேண்டும்!-ஒரு**
**மாற்றுக் குறையாத மன்னவன் இவனென்று**
**போற்றிப் புகழ வேண்டும் (வேட்டைக்காரன்) தொகு-1**

என்று 'வேட்டைக்காரன்' என்னும் திரைப்படத்தில் கண்ணதாசன் சமுதாயத்தில் கற்றறிந்தவர்களின் பெருமையினைப் பாராட்டி கூறியிருப்பதைக் காணலாம்.

**முடிவுரை** மனம் அமைதியை நோக்கிய பயணத்தில் கண்ணதாசன் தம்மைப் போலவே மக்களை இருக்க திரைஇசைப் பாடல்களில் தந்துள்ளார். மேலும் உறவினர்களின் எதிர்பார்ப்புகளும், நண்பர்களின் உதவிகளையும் தமது பாடல்களில் மறக்காமல் பதிவு செய்து உயர்ந்த நட்பிற்கும் அன்பிற்கும் வடிவம் கொடுத்திருப்பதையும் உணரமுடிகிறது. வாழ்வின் பயணங்களில் வறுமையும் துன்பமும் குடிகொண்டிருக்கும் நிலையில் பிறக்கும் தத்துவச் சிந்தனைகளில் கண்ணதாசன் ஒரு பாடமாகக் காட்சி தருகிறார். காதலன்பின் உயர்வுக்கும் சங்கப் பாடல்களில் வரும் அகப்பாடல்கள் திரைஇசைப் பாடல்களுக்கு சான்றுகளாக விளக்குகின்றன.

கண்ணதாசனின் கவித்துவ சிந்தனைகள் வாழ்வியல் சிந்தனைகளாகவே திரை இசை பாடல்கள் பெரும்பங்கு வகித்துள்ளனர்.

**துணை நூற்பட்டியல்**


[1]. கண்ணதாசன், கண்ணதாசன் திரை இசைப்பாடல்கள் தொகுதி 1 வானதி பதிப்பகம் சென்னை, ஐந்தாம் பதிப்பு 1992.

[2]. கண்ணதாசன், கண்ணதாசன் திரை இசைப்பாடல்கள் தொகுதி 2 வானதி பதிப்பகம் சென்னை, நான்காம் பதிப்பு 1988.

[3]. கண்ணதாசன், கண்ணதாசன் திரை இசைப்பாடல்கள் தொகுதி 3 வானதி பதிப்பகம் சென்னை, இரண்டாம் பதிப்பு 1992.

[4]. கண்ணதாசன், கண்ணதாசன் திரை இசைப் பாடல்கள் தொகுதி 4 வானதி பதிப்பகம் சென்னை, இரண்டாம் பதிப்பு 1992.

[5]. கண்ணதாசன், கண்ணதாசன் திரை இசைப் பாடல்கள் தொகுதி 5 வானதி பதிப்பகம் சென்னை. , பதினொன்றாம் பதிப்பு 1991.

[6]. சபீதா ஜோசப், கண்ணதாசன் 100 காவியத் துளிகள், நக்கீரன் வெளியீடு, 105,ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை-14, ஐந்தாம் பதிப்பு-2012

[7]. ச.திருஞானசம்பந்தம், தொல்காப்பியம் – பொருளதிகாரம், கதிர் பதிப்பகம், தெற்குவீதி, திருவையாறு, முதற்பதிப்பு, மார்ச்சு -2018

[8]. நாக. ஜெகசிற்பியன், கண்ணதாசன் பாடல்களில் மனிதமனம், கண்ணதாசன் பதிப்பகம், 12, கண்ணதாசன் சாலை, தியாகராயநகர், சென்னை - 600 017.இரண்டாம் பதிப்பு-1999.

[9]. க. முத்துக்குமாரசாமி, சமுதாயச் சந்தனையில் கவியரசு கண்ணதாசன், வள்ளி பதிப்பகம், எண்: 55, கதவு எண்: B-3, இரண்டாவது தளம், ஸ்ரீஜி அபார்ட்மெண்ட்ஸ், மணப்பாக்கம் மெயின் ரோடு, மணப்பாக்கம், சென்னை 600 125, முதல் பதிப்பு : 2018.

[10]. ச.வே.சுப்பிரமணியன்,சங்கைலக்கியம் மூலம் முலுவதும், மணிவாசகர் பதிப்பகம், 31,சிங்கர்த்தெரு, பாரிமுனை, சென்னை-600108, முதல் பதிப்பு-2006.

[11]. புலியூர்க் கேசிகன் (உ_ஆ), திருக்குறள் புதிய உரை, பூம்புகார் பிரசுரம், சென்னை எட்டாம் பதிப்பு, 1993.


## Bibliography


[1]. Kannathaasan, kannadasan thirai isaippaadalgal thoguthi 1 vaanathi pathippagam Chennai, inthaam pathippu 1992.

[2]. Kannathaasan, kannadasan thirai isaippaadalgal thoguthi 2 vaanathi pathippagam Chennai, naangaam pathippu 1988.

[3]. Kannathaasan, kannadasan thirai isaippaadalgal thoguthi 3 vaanathi pathippagam Chennai, irandaam pathippu 1992.
[4]. Kannathaasan, kannadasan thirai isaip paadalkal thoguthi 4 vaanathi pathippagam Chennai, irandaam pathippu 1992.
[5]. Kannathaasan, kannadasan thirai isaip paadalkal thoguthi 5 vaanathi pathippagam Chennai, pathinondraam pathippu 1991.
[6]. Sabitha Joseph, *Kannadasan: 100 Kaviya Thuligal* (100 Poetic Drops of Kannadasan), Nakkeeran Publications, 105, Johnny John Khan Road, Royapettah, Chennai-14, Fifth Edition - 2012.
[7]. S. Thirugnanasambandam, *Tholkappiyam – Porulathikaram*, Kathir Pathippagam, South Street, Thiruvaiyaru, First Edition, March 2018.
[8]. Naga. Jegasirpiyan, *The Human Mind in Kannadasan's Songs*, Kannadasan Pathippagam, 12, Kannadasan Salai, Thyagaraya Nagar, Chennai - 600 017. Second Edition - 1999.
[9]. K. Muthukumarasamy, *Samuthaya Sandhanaiyil Kaviarasu Kannadasan*, Valli Pathippagam, No. 55, Door No. B-3, Second Floor, Sreeji Apartments, Manapakkam Main Road, Manapakkam, Chennai 600 125, First Edition: 2018.
[10]. S.V. Subramanian, *Sangailakkiyam Moolamum Uraiyum* (Sangam Literature: Original Text and Commentary), Manivasagar Pathippagam, 31, Singar Street, Parrys, Chennai-600108, First Edition - 2006.
[11]. Puliyur Kesikan (Ed.), *Thirukkural: New Commentary*, Poompuhar Prasuram, Chennai, Eighth Edition, 1993.

Copyright © Author(s), Issue DOI: https://doi.org/10.63300/kijts05sp052026 